## கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்

**நாள்** 16.10.2025

**அசல் வழக்கு எண்.248/2021**

**வா.சா.2 – ஆட்சிநாதன், த/பெ.முனுசாமி**

**சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்**

**குறுக்கு விசாரணை**

சொத்து யார் பெயரில் இருக்கிறது தெரியுமா என்றால் கேசவலு நாயுடு பெயரில் உள்ளது. 1978ல் நீங்கள் எங்கு இருந்தீர்கள் என்றால் காஞ்சிபுரத்திலிருந்து அவருடைய பக்கத்து வீட்டில் இருந்தேன். வழக்கு சொத்தில் முகவரி தெரியுமா என்றால் தெரியும். வேலூர் மெயின் ரோட்டில் உள்ளது கதவு எண் 476 ஆகும். கேசவலு நாயுடு கிரயம் வாங்கிய பத்திரத்தில் நீங்கள் சாட்சி கையொப்பம் போட்டீர்களா என்றால் இல்லை. விடுதலை பத்திரத்தில் கையொப்பம் போட்டீர்களா என்றால் இல்லை. ராதா அம்மாள் எப்போது இறந்தார்கள் தெரியுமா என்றால் தெரியாது. வரி மாற்றம் செய்ய அழைத்துச் சென்றார்கள் என்று எந்த வருடம் தெரியும் என்றால் 2018 ஆம் ஆண்டு தெரியும். நீங்கள் வாதிக்கு நெருக்கமாக இருக்கும் பட்சத்தில் உடன் வருவதாக கூறினீர்களா என்றால் நான் போயிட்டு வருகிறேன் என்று சொல்லிவிட்டு சென்றுவிட்டார்கள். லட்சுமி அம்மாள் தான் அவ்வாறு சொல்லிவிட்டு சென்றார்கள் என்றால் சரிதான். மூல விசாரணையில் பக்தவச்சலம் சொன்ன மாதிரி இருக்கிறது அதற்கு என்ன காரணம் என்றால் முன்பு அவர் பேசும்போது சொன்னார். லட்சுமி அம்மாளுக்கு தான் விடுதலை பத்திரம் எழுதிக் கொடுத்தது எப்பொழுது தெரியும் என்றால் கடந்த 2021 ஆம் ஆண்டு தெரியும். நீங்கள் ஏதேனும் பத்திரம் வாங்கி படித்துக் காட்டினீர்களா என்றால் இல்லை. 2021 ஆம் ஆண்டு விபரம் தெரியும் என்று உங்களுக்கு நேரடியாக தெரியுமா என்றால் வாதி சொல்லி தான் தெரியும். விடுதலை பத்திர விபரங்கள் உங்களிடம் சொன்னாரா என்றால் ரூபாய் 20000 சொன்னார்கள். பணம் கொடுத்து ரிஜிஸ்டர் செய்ததாக சொன்னார்கள். பணம் போட்டு உள்ளது ஆனால் என்னிடம் தரவில்லை என்று சொன்னார்கள் என்றால் சரிதான். விடுதலைப் பத்திரம் பணம் போடப்பட்டுள்ளது அந்த அம்மாவுக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி விவரங்கள் எப்பொழுது வாதி தெரிந்து கொண்டார்கள் என்றால் கடந்த 2021 அன்று தெரிந்து கொண்டார்கள்.

வீட்டினுடைய ரசீது யார் பெயரில் இருந்தது என்றால் கேசவலு நாயுடு பெயரில் இருந்தது இப்பொழுது மாற்றிக் கொண்டார்கள். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாகவே வாதிக்கும் அவருடைய அண்ணன் பிரதிவாதிக்கும் உறவு சுமூகமாக இருந்தது என்றால் சரி இல்லை. பிரச்சினையில் தான் இருந்தது. கடந்த 2018 ஆம் ஆண்டிலிருந்து வழக்கு தாக்கல் செய்யும் வரை ஆவணங்கள் கேன்சல் செய்ய ஏதேனும் நடவடிக்கை எடுத்தார்களா என்றால் தெரியாது. வாரிசு சான்றிதழ் ஏதேனும் வாங்கினார்களா தெரியுமா என்றால் சரிதான். லட்சுமி அம்மாள் போட்டு வாங்கியதாக சொன்னார்கள். லட்சுமி அம்மாள் பெயர் அதில் இருந்தது என்றால் சரிதான். இந்த வழக்கு தவிர வாதி பிரதிவாதிகளுக்கு இடையே மற்றொரு வழக்கு நடைபெற்று கொண்டு வருகிறது தெரியுமா என்றால் தெரியாது. உங்களுக்கு வழக்கு சொத்து குறித்து விவரங்கள் எதுவும் தெரியாது வீட்டுக்கு பக்கத்து வீட்டுக்காரர் என்பதால் நீதிமன்றம் வந்து பொய் சாட்சி சொல்கிறீர்கள் என்றால் சரியில்லை. வாதிக்கு தமிழே எழுத படிக்க தெரியாது என்கிற பட்சத்தில் அதனை வாதிக்கு படித்துக் காட்டியது யார் என்றால் தெரியாது அதைப்பற்றி என்னிடம் சொல்லவில்லை.

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typograped to the witness and acknowledged by him / her to be correct.

Sd/-T.Thirumal
Additional Subordinate Judge,
Kancheepuram.